வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவணகுமார்

தேதி 01.04.2025 நேரம் மாலை 6.10 மணி

---

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில், சிலி அதிபருடன் நடத்திய பேச்சு வார்த்தைகளை தொடர்ந்து, பேரிடர் மேலாண்மை, உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பு உடன்பாடுகள் எட்டப் பட்டன.
- நக்சல்வாதம் இல்லாத இந்தியாவை உருவாக்க, அரசு பெரிய அளவில் நடவடிக்கை எடுத்து வருவதாக, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.
- நவீன யுகத்தில், புதிய குற்றங்களை கையாள, சட்டம்-தொழில்நுட்பம் இரண்டும் கலந்த அணுகுமுறை ஒன்றை கடைபிடித்தல் அவசியம் என, மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.
- புதுச்சேரியில், சிபிஎஸ்இ பள்ளிகளுக்கு புதிய கல்வியாண்டு, இன்று தொடங்கி உள்ளது.

-----------------------

<u>மோடி சிலி 1 (17)</u>

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில், சிலி அதிபர் திரு. கேப்ரியேல் போரிக் ஃபாண்ட்-உடன் நடத்திய பேச்சு வார்த்தைகளை தொடர்ந்து, பேரிடர் மேலாண்மை, கலாச்சார பரிமாற்றம் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைக்க, இருநாடுகளுக்கும் இடையே உடன்பாடுகள் இறுதியாகின. அண்டார்டிகா ஆராய்ச்சியில் ஒத்துழைப்பதில் உள்ள ஆர்வம் குறித்து கடிதங்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

லத்தீன் அமெரிக்காவில், இந்தியாவின் முக்கிய நட்பு நாடு, சிலி என்றும், அண்டார்க்டிகா கண்டத்தை எட்டுவதற்கான தலை வாசலாகவே, இந்தியா, சிலியை பார்ப்பதாகவும், பிரதமர் திரு. நரேந்திர மோடி, அறிக்கை ஒன்றில் கூறியுள்ளார். முக்கியக் கனிமங்கள் துறையில், இருநாடுகளுக்கும் இடையில் நிலவும் கூட்டாண்மை வலுப்படுத்தப்படும் என்றும், சாதகமான வேளாண் துறை அம்சங்களின் அடிப்படையில், உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்த, இருநாடுகளும் ஒத்துழைக்கும் என அவர் கூறியுள்ளார்.

சிலியில் நவம்பர் 4ஆம் தேதி, தேசிய யோகா தினமாக அறிவிக்கப் பட்டுள்ளது குறித்து, பிரதமர் திரு. நரேந்திர மோடி மகிழ்ச்சி வெளியிட்டார். ஆயுர்வேதம் மற்றும் பாரம்பரிய மருத்துவத் துறையில் ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்தும், விவாதிக்கப் பட்டதாக அவர் கூறினார்.

<u>மோடி-சிலி 2 (16)</u>

விரிவான பொருளாதார ஒத்துழைப்பு உடன்பாடு ஒன்றை எட்டுவதற்கான பேச்சு வார்த்தைகளை தொடக்குமாறு, இருநாடுகளும் அவரவர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தி இருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி மேலும் தெரிவித்துள்ளார்.

சிலி அதிபர் திரு. போரிக் வெளியிட்டுள்ள அறிக்கையில், அண்டார்டிகா ஆராய்ச்சியில், முக்கியமாக எந்தெந்த அம்சங்களில் ஒத்துழைக்கலாம் என்பது குறித்து, இரு நாடுகளும், உடன்பாடு கண்டுள்ளதாக தெரிவித்தார். தமது இந்திய பயணத்தில் கலாச்சார பரிமாற்றங்களுக்கு, முக்கியத்துவம் அளிக்கப் படுவதாகவும் இந்திய ஒலி-ஒளிப்படத் துறையினர், சிலியில் படப்பிடிப்பு நடத்துவதை ஊக்குவிக்க, திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். பிரதமர் திரு. நரேந்திர மோடி, சிலிக்கு வரவேண்டும் என, தாம் அழைப்பு விடுத்திருப்பதாகவும், அவர் தெரிவித்தார்.

5 நாள் இந்தியப் பயணமாக, இன்று புதுடெல்லி வந்துள்ள சிலி அதிபர் திரு. போரிக், இப்பயணத்தின் போது, ஆக்ரா, பெங்களூரு, மற்றும்,

மும்பைக்கும் செல்ல இருக்கிறார். சிலி அதிபர் திரு. போரிக் இந்தியா வருவது, இதுவே முதல் முறை என்பதும் குறிப்பிடத்தக்கது.

-----------------------

*அமித் ஷா நக்சல்* (13)

நக்சல்வாதம் இல்லாத இந்தியாவை உருவாக்க, அரசு பெரிய அளவில் நடவடிக்கை எடுத்து வருவதாக, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார். நாட்டில் இடதுசாரி தீவிரவாதத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் எண்ணிக்கை, 12ல் இருந்து, 6ஆக கணிசமான அளவில் குறைக்கப்பட்டு, புதிய மைல் கல் எட்டப் பட்டுள்ளதாக, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் அவர் தெரிவித்துள்ளார். திறம்பட்ட, பாதுகாப்பான, வளர்ச்சி அடைந்த இந்தியா ஒன்றை உருவாக்குவதில், உறுதியான நக்சல்வாத எதிர்ப்பு அணுகுமுறை ஒன்றை அரசு கடைபிடித்து வருவதாகவும், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியில், முக்கிய கவனம் செலுத்தப் படுவதாகவும், மத்திய உள்துறை அமைச்சர் கூறியுள்ளார். அடுத்த ஆண்டு மார்ச் 31ஆம் தேதிக்குள், நக்சல்வாதத்தை முற்றிலுமாக ஒழிக்க இந்தியா உறுதி பூண்டுள்ளதாக, அவர் மேலும் கூறியுள்ளார்.

-----------------------

*சிபிஐ நிறுவன நாள்* (19)

நவீன யுகத்தில், புதிய குற்றங்களை கையாள, சட்ட விதிகள் மட்டுமே போதாது என்பதால், சட்டம்-தொழில்நுட்பம் இரண்டும் கலந்த அணுகுமுறை ஒன்றை விசாரணை அமைப்புகள் கடைபிடிக்க வேண்டும் என மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார். இன்று 62ஆவது சிபிஐ நிறுவன நாளை ஒட்டி, புதுடெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், DP Kholi நினைவு சொற்பொழிவாற்றிய அவர், செயற்கை நுண்ணறிவு போன்ற நவீன தொழில்நுட்பங்களின் அடிப்படையில் குற்றம் புரிபவர்களை கண்டுபிடிக்க, ஸ்டார்ட்-அப், மற்றும், உயர்கல்வி

நிறுவனங்களுடன் இணைந்து, சிபிஐ செயல்பட வேண்டும் என்றார். சைபர் குற்றங்களை கண்டுபிடிப்பதற்கான தடயவியல் ஆய்வகங்களை, சம்பந்தப்பட்ட அமைச்சகங்களும், அமைப்புகளும் ஒருங்கிணைந்து உருவாக்க வேண்டும் என அவர் வலியுறுத்தினார். காலனி ஆதிக்க கால சட்டக் கட்டமைப்பில் இருந்து மக்களை விடுவிக்கும் வகையிலான, புதிய குற்றவியல் நீதி நடைமுறை ஒன்றை அரசு கொண்டு வந்து இருப்பதாகவும், நடப்புத் தேவைகளுக்கு ஒவ்வாத சுமார் ஆயிரத்து 500 சட்டங்கள், முற்றிலுமாக நீக்கப் பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.சிறப்பான முறையில் செயல்பட்ட சிபிஐ அதிகாரிகளுக்கான குடியரசுத் தலைவரின் போலீஸ் பதக்கம் உட்பட பல்வேறு விருதுகளையும், அமைச்சர் இந்நிகழ்ச்சியின் போது வழங்கிச் சிறப்பித்தார்.

----------------------

*<u>முர்மு-ரிசர்வ் வங்கி (12)</u>*

நாட்டின் பணப் பட்டுவாடாக் கட்டமைப்பை தொடர்ச்சியான முறையில் மேம்படுத்துவதன் மூலம், துடிப்பான Fin-Tech சூழல் ஒன்றை உருவாக்கி, இத்துறையில் உலகின் முன்னணி நாடாக இந்தியாவை மேம்படுத்துவதில், ரிசர்வ் வங்கி முக்கிய பங்காற்றி இருப்பதாக, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார். இன்று மும்பையில் ரிசர்வ் வங்கியின் 90ஆம் ஆண்டு விழா நிறைவு நாள் நிகழ்ச்சியில் அவர் பேசுகையில், ரிசர்வ் வங்கி தனது 90 ஆண்டுப் பயணத்தில், முற்றிலும் அரசின் கொள்கைகள் மற்றும் பார்வைகளுக்கு ஏற்ப செயல்பட்டு வந்திருப்பதாகக் கூறினார். 2047ஆம் ஆண்டிற்குள், முன்னேறிய இந்தியாவை உருவாக்கும் இலக்கை எட்டுவதில், புதுமையான, அனைவருக்கும் ஏற்ற நிதிச் சூழலுக்கு, மிகுந்த முக்கியத்துவம் இருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

----------------------

புதுச்சேரி-சிபிஎஸ்இ 1 (5)

புதுச்சேரியில், சிபிஎஸ்இ பள்ளிகளுக்கு புதிய கல்வியாண்டு இன்று தொடங்கி உள்ளது. இனிப்பு மற்றும் எழுது பொருள் வழங்கி, மாணவர்களை, ஆசிரியர்கள் வரவேற்றனர். உயர்நிலைப் பள்ளி மாணவர்கள், இலவச புத்தகம் மற்றும் சீருடையுடன் புதிய கல்வியாண்டை தொடக்கினர். இதுகுறித்து கூடுதல் விவரங்கள்…

(வாய்ஸ்)

புதுச்சேரி-சிபிஎஸ்இ 2 (13)

(வாய்ஸ்)

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் அனைத்து 4 பிராந்தியங்களிலும், மொத்தமுள்ள 469 அரசு பள்ளிகளில், 10 மற்றும் 12ஆம் வகுப்பு நீங்கலாக இதர வகுப்புகளுக்கு, கடந்த 2023-24ஆம் கல்வியாண்டு முதல், சிபிஎஸ்இ பாடத் திட்டம் அமல்படுத்தப் பட்டது. கடந்த 2024-25ஆம் கல்வியாண்டு முதல், 1 முதல் 12 வரை, எல்லா வகுப்புகளுக்கும், சிபிஎஸ்இ பாடத் திட்டம் அமலுக்கு வந்துள்ளது. இவர்களில், 10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்கள், பொதுத் தேர்வு எழுதி முடித்து, தேர்வு முடிவுகளை எதிர் நோக்கிக் காத்துள்ளனர். 1 முதல் 9ஆம் வகுப்பு, மற்றும் 11ஆம் வகுப்பு மாணவர்களுக்கு, கடந்த 23ஆம் தேதி, ஆண்டு இறுதித் தேர்வு முடிந்த பின்னர், விடுமுறை விடப்பட்டது. இந்த விடுமுறை நேற்றுடன் முடிவடைந்து, இன்று முதல், பள்ளிகள் மீண்டும் திறக்கப் பட்டுள்ளன. நடப்பு ஏப்ரல் மாதம் முழுவதும் வகுப்புகள் நடைபெறும் என்றும், மே மாதம் கோடை விடுமுறையாக இருக்கும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

----------------------

*ஆதி திராவிடர் – ரங்கசாமி* (12)

புதுச்சேரியில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்கு, கடந்த நிதியாண்டில் ஒதுக்கப்பட்ட நிதியில், மத்திய நிதி ஆதரவுத் திட்டங்கள் அல்லாது, 98 சதவிகித நிதி, செலவிடப் பட்டுள்ளது. இதனை ஒட்டி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை இயக்குநர் திரு. இளங்கோவன், இன்று சட்டப் பேரவையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில், முதலமைச்சர் திரு. ரங்கசாமியை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

தனித் தமிழ்க் கழகத்தின் நிர்வாகிகளும்,அதன் தலைவர் திரு. தமிழ் நாவன் தலைமையில், இன்று முதலமைச்சர் திரு. ரங்கசாமியை அவரது அலுவலகத்தில் சந்தித்து, புதுச்சேரியில், கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களின் பெயர்ப் பலகைகள், கட்டாயம் தமிழில் இருக்க வேண்டும் என, சட்டமன்றத்தில், அறிவிப்பு வெளியிட்டதற்கு, நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

----------------------

Waves *பதிவு* (11)

மும்பையில், வரும் மே 1 முதல், 4ஆம் தேதி வரை நடைபெற உள்ள, ஊடக மற்றும் கேளிக்கை துறைக்கான Waves உச்சி மாநாட்டில், செய்தி சேகரிக்க விரும்பும் ஊடகத் துறை பிரதிநிதிகளுக்கான பதிவு நடைமுறைகள், கடந்த 26ஆம் தேதி, தொடங்கி நடைபெற்று வருகின்றன. பத்திரிக்கையாளர்கள், புகைப்பட செய்தியாளர்கள், உள்ளடக்க படைப்பாளிகள், மற்றும், இதர ஊடகத் துறை பிரதிநிதிகள், வரும் 15ஆம் தேதி வரை, app.wavesindia.org இணையதளம் மூலம் பெயர்ப் பதிவு செய்து கொள்ளலாம் என அறிவிக்கப் பட்டுள்ளது. மத்திய அரசின் பத்திரிக்கை தகவல் அலுவலகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஊடகத் துறையினருக்கு மட்டுமே, Waves அனுமதி அட்டை பெற தகுதி உள்ளவர்களாக கருதப் படுவார்கள் என்றும், தெரிவிக்கப் பட்டுள்ளது.

-----------------------

*புலிகள் தினம் 1(5)*

புலிகள் இனம் அழியாமல் தடுக்க, 1952 ஆம் ஆண்டு இதே நாளில், அரசு கொண்டு வந்த Project Tiger திட்டத்தினால், நாட்டில் மொத்தம் உள்ள புலிகளின் எண்ணிக்கை, கடந்த 2022ஆம் ஆண்டில், 3 ஆயிரத்து 682 ஆக அதிகரித்து, உலகின் 75 சதவிகித புலிகளை கொண்ட நாடாக, இந்தியா மேம்பட்டுள்ளது. இதுகுறித்து கூடுதல் விவரங்கள்....

(வாய்ஸ்)

*புலிகள் தினம் 2(10)*

(வாய்ஸ்)

நாட்டில் தற்போது, மொத்தம் 83 ஆயிரம் சதுர கிலோ மீட்டர் வனப் பரப்பில், புலிகளுக்கான, 57 சரணாலயங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில், தமிழகத்தில் உள்ள 5 சரணாலயங்களில், 306 புலிகள் இருப்பதாக கணக்கிடப் பட்டுள்ளது. புவிக் கோளத்தின் பல்லுயிர்ச் சூழலை பராமரிப்பதில் முக்கிய பங்காற்றும் புலிகளின் எண்ணிக்கையை, 2 மடங்காக உயர்த்துவதான, செயின்ட் பீட்டர்ஸ்பர்க் அறிக்கையின் இலக்கை, நிர்ணயிக்கப் பட்டதற்கு 4 ஆண்டுகள் முன்பாகவே, இந்தியா எட்டியதும், சர்வதேசப் புலிகள் கூட்டணியை உருவாக்கியதன் மூலம், புலிகளின் பாதுகாப்பில், இந்தியா, உலக அளவில் தலைமைத்துவம் வகிப்பதும் குறிப்பிடத்தக்கது.

-----------------------

*இ-விளையாட்டு* (10)

மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை இணையமைச்சர் திருமதி. ரக்ஷா நிகில் கட்சே, இன்று புதுடெல்லியில், 2025ஆம் ஆண்டு இ-விளையாட்டுகள் மாநாட்டை தொடக்கி வைத்தார். நாட்டில் விளையாட்டுக் கலாச்சாரத்தை வலுப்படுத்த பிரதமர் திரு. நரேந்திர மோடி மிகுந்த முக்கியத்துவம் அளிப்பதாகவும், வளர்ந்து வரும்

துறையான இ-விளையாட்டுகள் துறையில், வளர்ச்சியை மேலும் ஊக்குவிக்க அரசு உறுதி பூண்டுள்ளதாகவும் அவர் கூறினார். டிஜிட்டல் விளையாட்டுத் துறையில் புரட்சிகரமான மாற்றங்களை கொண்டு வருவதில், உலகின் முன்னணி நாடாக இந்தியாவை மேம்படுத்தவதற்கான உத்திகள் குறித்து, இம்மாநாட்டில் முக்கியமாக விவாதிக்கப் படுகிறது.

-----------------------

<u>*ஐபிஎல்* (5)</u>

ஐபிஎல் கிரிக்கெட்டில், இன்றிரவு 7.30 மணிக்கு, லக்னோவில் நடைபெறும் போட்டியில், லக்னோ-பஞ்சாப் அணிகள் மோத உள்ளன. தற்போது, புள்ளிப் பட்டியலில், லக்னோ 3ஆவது இடத்திலும், பஞ்சாப் அணி 5ஆவது இடத்திலும் உள்ளன. மும்பையில் நேற்று இரவு நடைபெற்ற போட்டியில், மும்பை அணி 8 வீக்கெட் வித்தியாசத்தில், கொல்கத்தா அணியை தோற்கடித்தது.

-----------------------

<u>*மக்களவை- பயறு வகை* (7)</u>

கடந்த 2023-24ஆம் ஆண்டில், பயறு வகைகளின் உள்நாட்டு உற்பத்தி, 242 லட்சம் டன்னாக உயர்ந்துள்ள நிலையில், பயறு வகைகளின் மொத்த தேவையும் 280 லட்சம் டன்னாக அதிகரித்து இருப்பதாக, மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி, இன்று மாநிலங்களவையில் தெரிவித்தார். தேவைகளை சமாளிக்க, 30 முதல், 40 லட்சம் டன் பயறு வகைகள், இறக்குமதி செய்யப் படுவதாக, கேள்வி நேரத்தின் போது அவர் கூறினார்.

-----------------------

காந்தி ஆசிரமம் (12)

சபர்மதி ஆசிரமத்தை கையகப்படுத்தி, மறு மேம்பாடு செய்வதான, குஜராத் மாநில அரசின் உத்தேசத்தை ஆட்சேபித்து, மகாத்மா காந்தியின் கொள்ளு பேரன் தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு ஏற்க, உச்சநீதிமன்றம் மறுப்பு தெரிவித்துள்ளது. எளிமை, மற்றும், சுயசார்பின் சின்னமாக, தனிப்பட்ட முறையில் மகாத்மா காந்தியால் வடிவமைத்துக் கட்டப்பட்ட சபர்மதி ஆசிரமத்தை மறுமேம்பாடு செய்வது, காந்தீய கொள்கைகளுக்கும், அரசியல் சாசன விதிமுறைகளுக்கும் எதிரானது என்று, மனுதாரர் தனது மனுவில், வாதிட்டு இருந்தார். ஏற்கனவே இந்த மனு, குஜராத் உயர்நீதிமன்றத்தால், முதலில் ஒருமுறையும், பின்னர், உச்சநீதிமன்ற உத்தரவின் பேரில் நடைபெற்ற மறு விசாரணைகளை தொடர்ந்து, மீண்டும் ஒருமுறையும், தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில், மனுதாரர் மீண்டும் உச்சநீதிமன்றத்தை அணுகி இருந்தார்.

-----------------------